Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 2 16-3-1985 சனிக்கிழமை (பங்குனி 3 -ஜ.ஆகிர் 23) முழக்கம் 40

## யாழ். நகரின் புதிய பிரச்சினை! 150 'வாளி'யை என்ன செய்வது?

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் தினசரி சேகரிக்கப்படும் வாளிக் கக்கூசுகளின் மலத்தை புதைப்பதற்கு இடமில்லாத ஒரு பிரச்சினை தற்போது யாழ். மாநகராட்சி நிர்வாகத்துக்கு ஏற்பட்டுள்ளது. கடந்த நாற்பது வருடங்களாக மலம் புதைப்பதற்கு பயன்படுத்தப்பட்டு வந்த கொழும்புத்துறைக் காணிகளில் தற்போது அத்துமீறிக் குடியிருப்பவர்கள், மலம் புதைப்பதை தடுத்து வருவதே இதற்குக் காரணமாம். நகரிலுள்ள சுமார் இரண்டாயிரம் வீடுகளில் தினசரி காலையில் சேகரிக்கப்படும் சுமார் நூற்றைம்பது வாளி மலத்தையும் எங்கே புதைப்பது என்று தெரியாமல் யாழ் மாநகர சுகாதாரப் பகுதி அதிகாரிகள் இப்போது குழம்பிக் கொண்டிருக்கின்றனர்கள்.

### ★ அமைச்சர் அத்துலத் முதலியின் பேச்சு:

# தமிழ்த் தீவிரவாதிகள் தங்களது ஈழம் பற்றிய முதற் கொள்கையை இன்னமும் கைவிடவில்லை

நாட்டின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக மக்களின் அடிப்படை உரிமைகளை அமுல் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்க ஆலோசித்துள்ளது. இந்தத் தகவலை தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலி நேற்றுத் தெரிவித்தார்.

''இலங்கை போன்ற பல இன மத மக்கள் வாழும் நாடுகளில் எந்த ஒரு சமூகமும் பாதிக்காத வகையில் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை மிதவாதக் கொள்கையை பின்பற்றுகிறது. தீவிரவாதக் கொள்கையை பின்பற்றவில்லை. பிரிவினை கோரிக்கைகளில் வெற்றி பெற முடியாது என்று தீவிரவாதிகள் உணர்ந்துள்ளனர். ஆனால் ஈழம் பற்றிய தமது ஆரம்பக் கொள்கையை அவர்கள் விடவில்லை என்று சொன்ன அமைச்சர் நமது பாதுகாப்புப் படையினர் தீவிரவாதிகளின் எத்தகைய தாக்குதலையும் முறியடிக்கும் வலிமை உடையவர்களாக இருக்கிறார்கள் என்றும் கூறினார்.

பயங்கரவாதம் பற்றிய பத்திரிகைத் தணிக்கை பற்றிக் குறிப்பிட்ட அமைச்சர் இப்பிரச்சினையை தனி நபரோ அல்லது குழுவினரோ தமது அபிப்பிராயத்தை உண்மைகளை அறிந்து தெரிவிக்கத் தடைவிதிக்கப்படவில்லை யென்று சொன்னார்.

# இலங்கை அரசை இந்திய அரசு தொடர்ந்து நெருக்குகின்றது!

## அரசியல் தீர்வுதான் பிரச்சினைதீர ஒரே வழி பாராளுமன்றததில் அமைச்சர் ஆலம்கான்

(புதுடில்லி)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இங்கு வாழும் சகல மக்களும் ஏற்கக்கூடிய வகையில் அரசியல் தீர்வு காண்பதற்காக இலங்கை அரசுடன் பாரத அரசு அடிக்கடி தொடர்புகொண்டு நெருக்கி வருவதாகவும், விரைவில் தீர்க்கமானதொரு முடிவு பெறப்படும் என்ற நம்பிக்கை இருப்பதாகவும் இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. குர்ஷித் ஆலம் கான் நேற்று பாராளுமன்றத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

பெரும் தொகையான அகதிகள் இலங்கையிலிருந்து இந்தியாவுக்குள் வந்திருப்பதாலும், இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்பட்டமையாலும் இனப்பிரச்சினை விவகாரததில் இந்தியா கூடுதலாகச் சிரததை காட்டவேண்டியேற்பட்டதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுச் சொன்னார்.

இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் உட்பட பல்வேறு கட்சிப் பாராளுமன்ற உறுப்

—4-ஆம் பக்கம் பார்க்க

## குறிப்பிட்ட பகுதிகளில் காலை 3 முதல் மாலை 4 வரை மீன் பிடிப்பதற்கு அனுமதி

கடல் கண்காணிப்பு வலயத்தினுள் மீண்டும் மீன் பிடிப்பதற்கு அனுமதிப்பது பற்றி சில விதிமுறைகளுடன் அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக கடற்றொழில் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா நேற்று அறிவித்தார்.

புங்குடுதீவு–பேசாலை, நடுக்குடா–சுற்பிட்டி, முல்லைத்தீவு–கொக்கிளாய் ஆகிய பகுதிகளில் காலை மூன்று மணி முதல் மாலை நாலு மணி வரை மீன் பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்படவுளளதாக அவர் தெரிவித்தார்.

நான்கு மீனவர்கள் மட்டுமே படகில் மீன்பிடிக்கச் செல்ல அனுமதிக்கப்படுவர் என்றும்,

—4-ஆம் பக்கம் பார்க்க

## மன்னாரில் வெடிச் சத்தம்

(மன்னார்)

மன்னார் வாடியடிப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு திடீரெனக் கேட்ட பெரும் சத்தத்தை அடுத்து பாதுகாப்புப் படையினர் உஷார் நிலையை அடைந்தனர். சுமார் இரு மணி நேரமாக பரவலாக பலத்த வெடிச் சத்தங்கள் தொடர்சியாகக் கேட்ட வண்ணமிருந்தது.

## பென்ஸ் லொறி கடத்தப்பட்டது

புத்தூர் நவக்கிரியில் உள்ள கராஜ் ஒன்றில் திருத்துவதற்காக நிறுத்தப் பட்டிருந்த

—4-ஆம் பக்கம் பார்க்க

## பாரத வெளிவிவகார அமைச்சின் செயலர் ரமேஷ் பண்டாரி இலங்கை வருகிறார்!

(புதுடில்லி)

இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் திரு. ரமேஷ் பண்டாரி மாத இறுதிக்குள் இலங்கைக்கு விஜயம் செய்யலாம். இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் விசேஷ தூதுவராக அவர் ஆங்கு வருவார்,

தெற்காசியாவின் ஐந்து நாடுகளுக்குத தமது பிரதிநிதியாக திரு. ரமேஷ் பண்டாரியை அனுப்புவதென்று பிரதமர் தீர்மானிததுள்ளார்.

இநதியா தனது அயல்நாடுகளுடன நட்புறவை வளர்க்க விரும்புவதாகவும் அதனால் தமது பிரதிநிதியை ஐந்து அயல நாடுகளுக்கு அனுபபத்தாம் தீர்மானித்துள்ளதாகவும் பிரதமர் ராஜீவ் காந்தி நேற்று அறிவித்தார்.

இநத நடவடிக்கையின்கீழ் திரு, ரமேஷ் பண்டாரி முதலில் ஆப்கானிஸ்தானுக்கு விஜயம் செய்வார் என்றும், பின

—4-ஆம் பக்கம் பார்க்க

## நீதிமன்றப் பொருட்கள் அபகரிப்பு

சாவகச்சேரி தொழில் நீதிமன்றத்திற்கு ஆயுதங்களுடன் நேற்று முன்தினம் இரவு சென்ற சில இளைஞர்கள் அங்

—4 ஆம் பக்கம் பார்க்க

### நேற்று முற்பகல் முற்றாக ஸ்தம்பிதம்:

## போதியளவு டீசல் கைவசம் இல்லாததால் வடபகுதி பஸ் சேவை தினசரி ஊசாட்டம்

டீசல் கைவசம் இல்லாததால் கடந்த இரண்டு தினங்களாகச் சீர்குலைந்திருந்த வடபகுதிப் போக்குவரத்துச்சபையின பஸ் சேவைகள் நேற்று முற்பகல் முற்றாக ஸ்தம்பித நிலையை அடைந்தது.

இதனால் நேற்றுக் காலை முதல் நண்பகல்வரை பிரதான சேவையில் மட்டுமன்றி, உள்ளூர் சேவையிலும் ஈடுபட்ட சகல பஸ்களும் அந்தந்த இடங்களிலேயே நிறுத்திவைக்கப்பட்டன.

சுமார் இரண்டு மணியளவில் ராணுவ பாதுகாப்புடன் யாழ் பஸ்நிலைய எண்ணெய்க் குதத்துக்கு டீசல் கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்தே மீண்டும் பஸ்சேவைகள் ஆரம்பமாகின.

ஐயாயிரம் லீட்டர் டீசல்

— 4–ஆம் பக்கம் பார்க்க

## பிரதமர் தட்ச்சர் எமது பாராளுமன்றத்தில் பேசுவதற்கு இரு கட்சிகள் கடும் எதிர்ப்பு

தமிழ் சிங்கள புத்தாண்டு தினமான ஏப்ரல் மாதம் 13ம் திகதி ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பாராளுமனறத்தில் பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்க்கிரட் தட்ச்சரை உரையாற்ற அனுமதிக்கக்கூடாதென்ற மக்கள் ஐக்கிய முன்னணியின் கோரிக்கைக்கு கம்யூனிஸ்ட் கட்சியும் தனது ஆதரவை வழங்க முன்வந்துள்ளது.

மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் திரு. தினேஷ் குணவர்தன ஏற்கனவே இதற்குத் தனது எதிர்ப்பைத் தெரிவித்ததுடன், ஜனாதிபதிக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இந்தக் கோரிக்கைக்குப் பூரண ஆதரவு வழங்குவது

—4-ஆம் பக்கம் பார்க்க

## நேற்றைய மகாநாடு

கோப்பாய், உடுவில், சங்கானை உதவி அரசாங்க அதி

—4-ஆம் பக்கம் பார்க்க

## யாழ்ப்பாணத்தில் 1000 ரூபா, 500 ரூபா கள்ள நோட்டுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் ஐநூறு ரூபா, ஆயிரம் ரூபா கள்ள நோட்டுகள் தாராளமாகப் பாவனைக்கு வந்துள்ளதாக பல புகார்கள் கிடைத்துள்ளன.

பெரிய வர்த்தக நிலையங்களில் மட்டுமன்றி, சிறு கடைகளிற்கூட இவ்வாறன கள்ள நோட்டுக்களைக் கொடுத்துப் பலர் பொருட்களைக் கொள்

—4-ஆம் பக்கம் பார்க்க

# பூஸாவில் இளைஞர்கள்: பெற்றோர் பெரும் கவலை

(சுண்டுக்குளி)

காலி பூஸா முகாமில் சிறை வைக்கப்பட்டு விசாரணையின் பின் விடுவிக்கப்படும் வடபகுதி இளைஞர்களைக் கடல் மார்க்கமாகக் கப்பல் மூலம் அனுப்புவதாக உறுதியளிக்கப்பட்டிருந்தும் இதுவரையும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாதிருப்பது பெற்றோருக்கு அச்சத்தையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது என்று முன்னாள் யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபை உறுப்பினர் திரு. சு. நடேசு கவலை தெரிவித்துள்ளார்.

திரு. சு. நடேசு, முன்னாள் வட்டுக்கோட்டை எம். பியின் செயலாளர் திரு. நாக. பத்மநாதன் ஆகியோர் கடந்த மாதம் 28ம் திகதி முன்னாள் வட்டுக்கோட்டை எம். பி திரு. நீலன் திருச்செல்வம் தலைமையில் கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு. எஸ். தொண்டமானைச் சந்தித்துப் பூஸா முகாம் இளைஞர்களின் விடுதலை பற்றியும், வடபகுதிப் பெற்றோரின் கோரிக்கையையும் எடுத்துரைத்தனர் இதனையடுத்து அமைச்சர் தொண்டமான் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலியுடன் தொடர்பு கொண்டபோது பூஸா முகாம் இளைஞர்களை கப்பல் மூலம் வடபகுதிக்கு அனுப்பச் சம்மதம் தெரிவிக்கப்பட்டதாம்.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் பாதுகாப்புப் படையினரால் விசாரணைக்காகப் பூஸா முகாமிற்குக் கொண்டு செல்லப்பட்ட 336 வடபகுதி இளைஞர்களில் 179 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்றும், மிகுதியாக விடுவிக்கப்படாதிருப்பவர்களையும், அதன் பின்னர் விசாரணைக்காகக் கொண்டு செல்லப்பட்டவர்களையும் விடுதலை செய்து கப்பல் மார்க்கமாக அனுப்பிவைக்குமாறும் திரு. நீலன் திருச்செல்வம் தலைமையிலான இக்குழு அமைச்சரிடம் கோரிக்கை விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.


உடனடியாக பேர்லின் (BERLIN) செல்ல விரும்புவோருக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!

**Cey Tours & Travel (PVT) Ltd.**

54, Keyzer Street, Colombo - 11 — 104, Chatham Street, Colombo - 1

இவர்களின் பிரதிநிதிகளாக விளங்கும்

**Quicks Enterprises Travels and Tours**

யாழ் மக்களுக்கு வழங்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்!

1 பேர்லின் BERLIN, பிரான்ஸ், ஹொலண்ட், கனடா, சுவிஸ் முதலிய இடங்களுக்குச் செல்ல விரும்புவோர் உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

2 வடபகுதியில் உள்ள மற்றைய ஸ்தாபனங்களையும் விட மிகக்குறைந்த கட்டணங்களில் விமான பிரயாணச் சீட்டுக்கள் பெற்றுக் கொடுக்கப்படும்.

3 18ந் திகதி திங்கட்கிழமை தொடக்கம் ஒவ்வொரு திங்கட்கிழமைகளிலும் எமது பிரதிநிதியொருவர் கொழும்பிலிருந்து Bangkok வரையும் பிரயாணிகளைக் கூட்டிச் சென்று BERLIN செல்லும் பிரயாணிகளை AEROFLOT விமானத்தில் பயணம் அனுப்புவார்.
Colombo – Bangkok – Moscow – Berlin

4 பாங்கொக்கில் தங்குமிடம், உணவு–Three Star Hotel இலவசம்.

5 யாழ்ப்பாணத்திலிருந்து கட்டுநாயக்கா விமான நிலையம்வரை எமது பிரதிநிதி உங்களுடன் வந்து சகல ஒழுங்குகளையும் செய்து கொடுப்பார்.

6 கொழும்பில் தங்குமிடவசதி, உணவு, கொழும்பில் இருந்து கட்டுநாயக்கா செல்லும் ஒழுங்குகள், கொண்டு செல்லவேண்டிய காசோலைகள் (Travellers Cheques) யாவும் இலவசமாக செய்து கொடுக்கப்படும்

7 மேலும் இந்தியாவுக்கு விசா, கடவுச்சீட்டு (Bonding) கடவுச்சீட்டு புதுப்பித்தல், மாற்றுதல் யாவும செய்ய ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

மேலும் வேண்டிய விபரங்களுக்கு கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

Mrs. Savithridevi Balasingam
QUICKS ENTERPRISES TRAVELS AND TOURS
553, Stanley Road,
Jaffna.

எமது கிளை ஸ்தாபனங்கள்:–

(1) Quicks Travels and Tours, Saraswathy Gardens, Church Road, Chavakachcheri
(2) Quicks Enterprises, Adiyapatha Veethy, Kalviyankadu, Nallur, Jaffna
(3) Indrapalas, 108. K.K.S Road, Chunnakam.
(4) Mr. Joseph Nayagam, Seven Temple Farm, Paranthan Junction, Paranthan


## மெய்வல்லுனர் போட்டி

(குருநகர்)

குருநகர் சென் ஜேம்ஸ் மகா வித்தியாலய வருடாந்த மெய்வல்லுனர் போட்டி இன்று நடைபெறவுள்ளது.

## இலவசம்

விறகுப்பஞ்சத்தைப்போக்குவதற்காக யாழ்ப்பாணம் மில்க்வைற் ஸ்தாபனத்தார் ஆளுக்கொரு சவுக்கு, சஞ்சீவி கன்றுகளை இலவசமாக வழங்குகின்றனர்.




✻ நுணாவில் மேற்கு, லிங்கேஸ்வரன் - தேவகி தம்பதிகளின் மகள் தர்சிகா இன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ நுணாவில் கிழக்கு, பாலசுந்தர ஐயர்-விமலா தம்பதிகளின் புதல்வி பாரதி இன்று தனது ஐந்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✻ கொக்குவில் பிறவுண் வீதி, வைகுந்தவாசன்–அன்னலக்ஷ்மி தம்பதிகளின் மகள் ரஜிதா இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✻ யாழ் புங்கங்குளம் வீதி, சலமோன்பெஞ்சமின் திரேஸ் தம்பதிகளின்மகன் டொனல்ட் றேமண்ட் இன்று தன் பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✻ உரும்பராய் கிழக்கு, பேரின்பநாயகம் இராஜலக்சுமி தம்பதிகளின் மகள் இன்று தனது ஏழாவது பிறந்தநாளை கொண்டாடுகிறார்

✻ இளவாலை அலோசியஸ்-அமிர்தராணி தம்பதிகளின் மகள் அன்ரனிற்றா நிலோஜினி இன்று இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

# சர்வதேச மகளிர் தினத்தில் கோப்பாயில் சிரமதானம்

(இருபாலை)

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் வலி-கிழக்கு மாதர் பணியகத்தின் உதவியுடன் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. கு. கிட்ணர் தலைமையில் சிரமதானப் பணி மேற்கொள்ளப்பட்டது

உதவி திட்டமிடல் பணிப்பாளர்கள் திரு வி. எஸ். சுவமிநாதன், திருமதி சரோஜினி கந்தணேந்திரன் ஆகியோர் விசேட விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

மாதர் பணியக அங்கத்தவர்கள் நூற்றுக்கு மேற்பட்டோர் வரை கலந்து கொண்டதுடன் கோப்பாய் வடக்கு, தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கங்களும், கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பணிமனை விசேட உத்தியோகத்தர்களும், கோப்பாய் வைத்தியசாலை ஊழியர்களும், சுகாதாரப் பகுதி ஊழியர்களும் கலந்து கொண்டு வைத்தியசாலை கட்டிடங்களையும் வளவுகளையும் சுத்தம் செய்தனர்.

சிரமதான இறுதியில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு கு. கிட்ணர், "இந்த சிரமதானப் பணியைத் தடையின்றி மிக உற்சாகத்தோடு செய்து முடித்ததற்கு நன்றி தெரிவித்ததுடன் சுகாதார அபிவிருத்தியோடு இணைந்து நடாத்தியதால் மக்களுக்கு நீண்ட கால பெறுபேறுகளை அளிக்க முடியும்" என்று கூறினர்.

வைத்திய அதிகாரி செல்வி வசந்தி குமாரசாமி உரையாற்றுகையில் வைத்தியசாலை தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அரசாங்கத்தின் உதவிகள் மட்டும் போதாது. சகல பொது மக்களின் உதவியும் தேவையெனக் கூறினர்.

# பனை வெல்லம் தயாரிப்பு மீண்டும்ஆரம்பமாகியுள்ளது

(சுண்டுக்குளி)

யாழ். மாவட்டத்தில் பல மாதகாலமாக மூடப்பட்டிருந்த பனை வெல்லத் தொழிற்சாலைகள் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளன. இத் தொழிற்சாலைகளை இயங்கச் செய்வதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை இலங்கைப்பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. கே நடராசா துரிதமாக மேற்கொண்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்து சாவகச்சேரியிலுள்ள இரு பனை வெல்லத் தொழிற்சாலைகள் உடனயாக உற்பத்தியை ஆரம்பித்துள்ளன என்றும், இப் பனை வெல்லத் தொழிற்சாலைகள் யாவும் பனம் வெல்ல உற்பத்தியைத் துரிதமாக மேற்கொள்ளுவதின் மூலம் தரமான பனம் வெல்லத்தைப் பெற முடியும் என்றும், உற்பத்தியாகும் பனம் வெல்லம் யாவற்றையும் சபை கொள்வனவு செய்து "கற்பகம்" விற்பனை நிலையங்கள் மூலம் சந்தைப் படுத்தும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


EURO LANKA TRAVELS LTD.
6A, DAISY VILLA AVENUE,
COLOMBO - 4.

தொலைபேசி: 58990, 589992

கொழும்பு / பேர்லின் சேவைகள்

உலகெங்கிலுமிருந்து வரும் உல்லாசப் பிரயாணிகளுக்கு மிகுந்த சேவை புரிந்து வரும் எங்கள் ஸ்தாபனம் இப்பொழுது உங்களின் பேர்லின் பயணத்தை மிகவும் சௌகரியமாக

பாங்கொக் (BANGKOK) ஊடாக AEROFLOT விமானத்தில் ஒழுங்கு செய்துள்ளது.

மார்ச் (MARCH) 25, 27 ஏப்ரல் (APRIL) 1ஆம்

திகதிகளில் பயணத்தை மேற்கொள்ள உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

கிளை:
EURO LANKA TRAVELS LTD.
40, 3rd, CROSS STREET,
JAFFNA.


## வரி விளம்பரம்


### சேவை

எப்பொருளானாலும் வாங்கவும், விற்கவும் ஒவ்வொரு நாளும் வாருங்கள் – ஏலவிற்பனை நிலையம கோப்பாய்.

### ஏலவிற்பனை

இன்று மாபெரும் ஏலவிற்பனை – பலவித பொருட்கள் காலை 9 மணி முதல் வாருங்கள் பாருங்கள் பெறுங்கள் – வாங்குங்கள் ஏலவிற்பனை நிலையம் கோப்பாய்.

### பயிற்சி

ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங், எலக்ரிக்கல் வயறிங், French, Hotel Management பயிற்சிகள் செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படுகின்றன. விபரங்களிற்கு JAFFNA TECHNICAL INSTITUTE, ஸ்ரான்லி வீதி, (றெயில்வே கடவையருகாமை) யாழ்ப்பாணம்.

### குத்தகைக்கு

யாழ்ப்பாணம் வை எம். சி. ஏ. இல் 900 சதுர அடி கொண்ட இரண்டு மாடிக் கட்டிடம் 1.5 85 முதல் குத்தகைக்கு விடப்படும். கண்டி வீதியை முகப்பாகக் கொண்ட இக் கட்டிடம் மருந்துச் சாலை புத்தக சாலை, தையல நிலையம், பற் சிகிச்சை நிலையம், அலுவலகம் முதலியவற்றிற்கு ஏற்றது. கேள்விப் பத்திரங்களை ரூபா 25 செலுத்தி வை. எம். சி. ஏ. அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

### தவறிவிட்டது

646690706V இலக்கத்தையுடைய அ பவாநந்தி என்பவருடைய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுப்போர் தயவுசெய்து ஈழமுரசு காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

கலர் பிலிம் PROCESSING PRINTING கொழும்பு ஸ்ருடியோ

வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

ஈழமுரசு



உதய சிந்தனை

சுதந்திரமே எனது தேவை. ஆனால் அதை நம்பிருக்க நான் வெட்கமடைகிறேன். — மகாத்மா காந்தி.

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி 23336

இதய ஒலி

16-3-85 சனிக்கிழமை (இரத்தாக்ஷி பங்குனி 03)

# திருமலையும் கச்சதீவும் பிரச்சினையைக் கூட்டுமா?

இலங்கைத் தமிழர்கள் எதிர்நோக்கி வாழும் இனப்பிரச்சினையுடன் இணைந்ததாக, மேலும் இரு விவகாரங்கள் இப்போது தலை தூக்கியுள்ளன.

திருமலையும், கச்சதீவுமே இவ்விரு பிரச்சினைக்குரிய விவகாரங்களாகும்.

திருமலையை ஒரு தளமாகப் பாவிக்க அமெரிக்காவுக்கு இலங்கை வழங்கலாமென்ற சந்தேகமொன்று நீண்ட காலமாகவே உயர் வட்டாரங்களில் நிலவி வந்தது

அந்தப் பேச்சுக்கே இடமில்லை என்று அரசாங்கமும் சொல்லி வந்தது.

ஆனால் திடீரென்று அமெரிக்க உதவியுடன் இரண்டாவது சர்வதேச விமான நிலையமும், இரண்டாவது சுதந்திர வர்த்தக வலயமும் திருமலையில் அமைக்கப்படவிருப்பதாக அரசாங்கம் அறிவித்திருப்பது, அதனுடைய முன்னைய உத்தரவாதத்தை மீறுவதாக சந்தேகம் கொள்ளவைக்கின்றது.

1977-ம் ஆண்டிற்குப் பின்னர் நடைபெற்று வந்த திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத் திட்டங்களைத் தொடர்ந்து, திருமலையில் அமெரிக்காவைக் கால் வைக்க அனுமதிக்கும் இந்தச் செயலை, மிகவும் அவதானமாகவே பார்க்க வேண்டியது தமிழர்களின் கடமையாகும்.

விமானத் தளமும், வர்த்தக வலயமும் ஒன்று சேர்ந்து மேலும் என்னென்ன வலயங்களை அங்கு உருவாக்கும் என்பதை ஓரளவுக்கு ஊகிக்க முடிகின்றது.

யாழ்ப்பாணத்துக்கு அண்மையிலுள்ள கச்சதீவு இன்று தமிழ்நாட்டில் பூதாகரமான ஒரு பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

நெடுந்தீவுக்கு அண்மியதாக இருக்கும் இந்தக் குட்டித்தீவு ஒரு காலத்தில் இரு நாட்டு மக்களும சந்திகும் ஒரு புண்ணிய பூமியாகத் திகழ்ந்து வந்தது.

இங்கு குடி கொண்டிருக்கும் அர்ச் அந்தோனியார் இரு நாட்டு மக்களுக்கும் அருள் பாலித்து வந்தார்.

வருடாந்த உற்சவ நாட்களை விட, வருடம் பூராவும் இரு நாட்டு மீனவர்களும் இளைப்பாறவும், மீன் வலைகளைக் காய வைக்கவும் கச்சதீவை ஒரு பொதுவான இடமாகவே பயன்படுத்தி வந்தனர்.

1970-ம் ஆண்டு ஆட்சிக் காலத்தில், மறைந்த பாரதப் பிரதமர் இந்திரா காந்தியின் நல்லெண்ணத்தினால் கச்சதீவு இலங்கையிடம் கையளிககப்பட்டது.

ஒப்பந்தம் ஒன்றின் அடிப்படையிலேயே கச்சதீவை இந்தியா இலங்கையிடம் வழங்கியது. அதன்படி இந்திய மீனவர்கள் எந்த வேளையிலும், எந்தச் சோதனையுமின்றி கச்சதீவுக்கு வந்துபோக முடியும்.

ஆனால் இன்று அந்த உரிமை மறுக்கப்பட்டு வருவது தமிழ்நாட்டில் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

கச்சதீவு வருடாந்த உற்சவங்களை யாழ்ப்பாணத்துக் 'கால நிலை'யைச் சாட்டாக வைத்து ரத்துச் செய்வதையிட்டு தமிழ்நாடு அலட்டிக் கொள்ளவில்லை.

ஆனால் பாதுகாப்புச் சட்டங்களையும், கடல் கண்காணிப்புச் சட்டங்களையும் காரணமாக வைத்து, தமிழக மீனவர்களை கச்சதீவு மண்ணில் கால் வைக்க விடாது தடுக்கும் இலங்கையின் முயற்சிகளே தமிழகத்தை ஆத்திரமூட்டச் செய்துள்ளது.

இதனால் கச்சதீவு ஒப்பந்தம் ரத்துச் செய்யப்பட வேண்டும் என்றும், இந்தியா கச்சதீவை மீண்டும் பெற வேண்டுமென்றும் தமிழகத்தில் கோஷம் எழும்பியுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகத்தினால் எழுப்பப்பட்டுள்ள இப்பிரச்சினைக்கு அண்ணா தி. மு. க. அரசு முழு ஆதரவையும் வழங்கியுள்ளது.

சர்வ கட்சித் தலைவர்கள் கூட்டம் நடத்தி, தமிழக அரசு மூலம் தீர்மானம் எடுக்கவுள்ளதாக அமைச்சர் நெடுஞ்செழியன் அறிவித்துள்ளதை வெறும் கோஷமாக எடுத்து விடமுடியாது.

திருமலையை அமெரிக்காவின் கைகளில் ஒப்படைக்க முயற்சி எடுக்கும் அதே வேளையில், கச்சதீவிற்கு தமிழக மீனவர்களை வரவிடாது தடுப்பதை பாரதம் வெறுமனே பார்த்துக்கொண்டிருக்க முடியாது.

திருமலையில் உருவாகும் அபாய எச்சரிக்கையும், கச்சதீவில் உருவாகியுள்ள காணிப்பிரச்சினையும் கூட இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை இழுத்தடிக்க எடுக்கப்படும் முயற்சிகளாகவே எமக்குத் தெரிகின்றன.

வளைகுடாப் போர்: சளைக்காத பலப் பரீட்சை

# ஏவுகணை பீரங்கி தாக்குதல் நீடிப்பு நச்சு இரசாயனமும் பயன்படுகிறதா?

(லண்டன்)

நாளுக்கு நாள், மணித்தியாலத்திற்கு மணித்தியாலம், நிமிடத்திற்கு நிமிடம், வினாடிக்கு வினாடி உக்கிரமடைந்து வரும் வளைகுடாப் போரில் தாமே வெற்றி வாகை சூடிக் கொண்டிருப்பதாக ஈரானும, ஈராக்கும் கூறிக்கொள்கின்றன. போர் விளைவுகள் குறித்து முரணான தகவல்கள் வந்துகொண்டிருக்கின்றன. இரு நாடுகளினதும் தலைநகர்களான பாக்தாத்திலும், தெஹ்ரானிலும் மிக உச்சக் கட்ட மோதல் நடைபெற்று வருவதாக இராணுவ அறிக்கைகள் தெரிவிக்கின்றன. ஈரான், ஈராக் மீதான வஞ்சினம் தீர்க்கும் நடவடிக்கையாக தனது சகல போராயுதங்களையும் பாவித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. தெற்கு ஈராக்கில் பீரங்கித் தாக்குதல்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் மேலும் சில நகரங்கள் தாக்குதலுக்குள்ளாகியிருப்பதாகவும் இராணுவ அறிக்கைகள் நேற்று மேலும் தெரிவித்தன. இரவோடிரவாக பதிலடி கொடுப்பதற்கு ஈரான் தனது படைகளுக்கு உத்தரவு பிறப்பித்திருப்பதாகவும் உத்தியோகபூர்வ செய்திஸ்தாபனம் அறிவித்தது.

கடற்படைத் தளங்கள் தாக்கப்படுவதாகவும் பீரங்கி, ஏவுகணைத் தாக்குதல்கள் தொடர்வதாகவும் இரு தரப்பிலும் பெருத்த நஷ்டம் உண்டாகியிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. பாக்தாத் நகரின் பாரிய கட்டடம் ஒன்று அழிக்கப்பட்டு இருப்பதாகவும் கூறப்படுகிறது.

இது இவ்வாறிருக்க, தீவிரமடைந்து வரும் இப் போரில் ஈராக் நச்சு இரசாயனம் கலந்த ஆயுதங்களைப் பாவித்து வருவதாக ஈரான் குற்றஞ்சாட்டியுள்ளது.

வளைகுடாவில்சர்ச்சைக்குரிய நீர் வழிப் பிரதேசத்திலும் மற்றும் புதர்ப் பகுதிகளிலும் யுத்தம் பயங்கர வேகத்தில் நிகழ்ந்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஈரான் தொடுத்த பலமான தரைத் தாக்குதலுக்குத் தான் பதிலடி கொடுத்துள்ளதாக ஈராக் அறிவித்தது.

எனினும் ஈராக் தனது எல்லைக்கப்பால் இன்னமும் தாண்டிச் செல்லவில்லை என்பதனை ஈராக்கிய அதிகாரி ஒருவர் ஒப்புக் கொண்டுள்ளார்.

## முதலமைச்சர் நியமனம் குறித்து ஜி. கே. கருத்து

(புதுடில்லி)

சட்டசபைத் தேர்தல்களின் பின் மாநில முதலமைச்சர்களை இந்திரா காங்கிரஸ் முழு ஜனநாயக அடிப்படையிலேயே நியமித்திருப்பதாக அதன் பொதுச் செயலாளர் திரு. ஜி. கருப்பையா மூப்பனார் நேற்றுப் புதுடில்லியில தெரிவித்தார்.

கட்சிப் பார்வையாளர்களுக்கும், பிரதம மந்திரிக்கும் மட்டுமே தெரியக் கூடியதாக இரகசிய வாக்கெடுப்பு மூலம் இவர்கள் தெரிவானதாகவும் சொன்னார் அவர்.

## ஆட்சேபம்

(புதுடில்லி)

பஞ்சாப் ஆளுநராக திரு. அர்ஜுன்சிங் நியமிக்கப்பட்டுள்ளதை ஜனதாக்கட்சி குறைகூறி ஆட்சேபித்துள்ளது.

மாஸ்கோவில் ஜோர்ஜ் புஷ் தகவல்

## பாரதப் பிரதமர் வருகையில் ஜனாதிபதி றீகன் ஆர்வம்

(மாஸ்கோ)

பாரதப்பிரதமர் திரு ராஜீவ் காந்தியின் வருகையை அமெரிக்க ஜனாதிபதி திரு. றொனல்ட் றீகன் ஆர்வத்துடன் எதிர்நோக்கியிருக்கிறார்

இத்தகவலை அமெரிக்கத் துணை ஜனாதிபதி திரு ஜோர்ஜ் புஷ் நேற்று நிருபர்களிடம் பேசுகையில் வெளியிட்டார்.



அமெரிக்கா பாரதத்துக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபடாது என்ற உறுதிமொழியை தான் பாரதப் பிரதமரைச் சந்தித்து உரையாடியபோது தெரிவித்ததாகவும் அவர் சொன்னார்.

மாஸ்கோவில் திரு. புஷ்ஷுடன் தான் பேச்சுவார்த்தை நடத்திய போது தெற்காசிய நிலவரம் குறித்தும் கலந்து ஆலோசனை செய்ததாகப் பாரதப் பிரதமர் புதுடில்லி திரும்பியதும் கூறியிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்விரு தலைவர்களினதும் சந்திப்பில் சர்வதேச நிலைமை மிக விரிவாக, தீர்க்கதரிசனத்துடன் ஆராயப்படுமென்று அரசியல் விமர்சகர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

## ஜெனீவா பேச்சுவார்த்தை நிலைமையில் முன்னேற்றம்?

(ஜெனீவா)

தடைப்பட்டிருந்தசோவியத் யூனியன்-அமெரிக்க ஆயுதப் பரிகரணப் பேச்சுவார்த்தைகளின் போது விண்வெளியில் ஆயுத பாவனை மற்றும் அணு ஆயுத உற்பத்தி குறித்தும் பல தரப்பட்ட விடயங்கள் ஆராயப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

வாஷிங்டன் குழுவுக்கு தலைமை தாங்கிய திரு ஜோசப் லெமன் இப் பேச்சுவார்த்தை குறித்துத் தகவல் தருகையில் சமரசத்துக்கான சாத்தியக் கூறை நிராகரிக்கவில்லை,

## ரஷ்யாவும் சீனாவும் உறவினை மேம்படுத்த திடசங்கற்பம்

(பீக்கிங்)

சோவியத் யூனியனும், சீனாவும் பரஸ்பர உறவுகளை மேம்படுத்திக் கொள்ளவுள்ளன என்று பீக்கிங்கில் வைத்து சீனத் துணைப் பிரதம மந்திரி திரு. லீபிங் தெரிவித்தார்,

இருதரப்பு உறவுகளை விருத்தி செய்து கொள்ள மாஸ்கோவில் நடைபெற்ற சந்திப்பின்போது உறுதியான விருப்பம் தெரிவிக்கப்பட்டதாக அவர் சொன்னார்,

## அர்ஜுன்சிங் உறுதி

(புதுடில்லி)

பஞ்சாப் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்த்து வைக்க ஆக்கபூர்வ நடவடிக்கை மேற்கொள்ளவிருப்பதாக பஞ்சாப்பின் புதிய ஆளுநர் திரு அர்ஜுன்சிங் உறுதியளித்துள்ளார்.

## நம்பிக்கை

(வாஷிங்டன்)

சோவியத் யூனியன் புதிய தலைமை ஆயுதப பரிகரணவிடயத்தில் நல்ல நிலையை உருவாக்கும் என்று அமெரிக்க ஜனாதிபதி திரு றொனல்ட் றீகன் நம்பிக்கை தெரிவிததுள்ளார்.

மத்திய குழு நேரில் விஜயம்

## அகதி பராமரிப்பு: தமிழக நடவடிக்கையில் திருப்தி

(சென்னை)

இலங்கையிலிருந்து வரும் அகதிகளுக்குத் தமிழக அரசு மேற்கொண்டுவரும் உதவி நடவடிக்கைகள் குறித்து மத்திய அரசுக்குழு முழு திருப்தி தெரிவித்துள்ளது.

மத்திய உள்துறை இலாகாவைச் சேர்ந்த திரு ஹீர்ஜி, செல்வி. செனகான் என்ற இரு அதிகாரிகளும் ராமேஸ்வரம் மண்டபம் முகாம்களில் அகதிகளை நேரில் சென்று பார்வையிட்டனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும், மீனவர்களையும் இவ்வதிகாரிகள் சந்தித்தனர், ஆலோசனையும் நடத்தினர்.

அகதிகள் நிவாரணத்துக்கென அறுபத்து இரண்டு இலட்சம் ரூபாவை மத்திய அரசு செலவிட்டுள்ளது என்று இவ்வதிகாரிகள் நிருபர்களிடம் தெரிவித்தனர்.

அகதிகளை வேறு மாநிலங்களுக்கு அனுப்பும் சாத்தியமில்லை என்றும் தற்போது உள்ள முகாம்களே அவர்களுக்குப் போதுமானதென்றும் அத்தகைய நிலை உருவானால் மாநில அரசின் ஆலோசனையுடன் மத்திய அரசு முடிவு செய்யும் என்றும் அவர் கூறினார்.

வேறு மாநிலங்களுக்கு அகதிகளை அனுப்பவேண்டியதில்லை என்று தமிழக அரசு ஏற்கனவே அறிவித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர் தாக்கப்படும் பிரச்சினை குறித்தும் அகதிகள் நிலை குறித்தும் ஒருங்கிணைந்த அறிக்கை ஒன்று மத்திய அரசுக்குத் தம்மால் சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

ஈழமுரசு

## மேலும் பதினைந்து வீடுகள் அடுத்த வாரம் காலியாகும்!

குருநகர் இராணுவ முகாமுக்கு அருகில் குடியிருக்கும் மேலும் பதினைந்து வீட்டுக்காரர்களை அங்கிருந்து வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகள் இப்போது எடுக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரிடம் இதுபற்றித் தகவல் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து குருநகர் கிராம சேவையாளர் திரு. கே. சொக்கலிங்கமும், பண்ணைப் பகுதி கிராம சேவையாளர் திரு. ஆரோக்கியநாதரும் நேற்று சம்பந்தப்பட்ட வீடுகளைச் சென்று பார்வையிட்டனர். இவர்களையும் நாவற்குழி வீடமைப்புத் திட்டத்துக்கு அனுப்புவதற்கு ஒழுங்குகள் செய்யப்படுகின்றன.

### தொழிலாளர் சங்கச் செயலாளர் அறிக்கை:

# பொதுமக்கள் எதிர்ப்பின் மத்தியில் எந்தப் போராட்டமும் வெற்றிபெறாது

அண்மைக் காலங்களில் தமிழ்ப் பிரதேசங்களில் நடைபெற்று வரும் கொள்ளைச் சம்பவங்கள் சாதாரண மக்கள் மத்தியில் வெறுப்புணர்ச்சியை அதிகரிக்கச் செய்து வருகின்றது. யார் உண்மையான இயக்கத்தினர்? யார் கொள்ளை கோஷ்டியினர்? யார் உளவு ஸ்தாபனத்தின் கைக்கூலிகள் என இனம் காண முடியாத சூழ்நிலையில் எமது பிரதேச மக்கள் வாழ வேண்டியுள்ளது.

மேற்கண்டவாறு கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கச் செயலாளர் திரு. எஸ். விஜயானந்தன் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

குருநகர் சீநோர் தொழிற்சாலையில் இடம்பெற்ற கொள்ளையைக் கண்டித்து விடுக்கப்பட்ட இவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அரசாங்கம் யாழ். மாவட்டத்திலுள்ள ஒரு சில தொழிற்சாலைகளையும் மூடிவிட்டு அவற்றைத் தென்னிலங்கைக்கு எடுத்துச் செல்ல முயற்சிகள் மேற்கொள்ளப்படும் இவ்வேளையில் இப்படியான செயற்பாடுகள் அரசாங்கத்திற்கே சாதகமாக முடியும். எமது தொழிலாள வர்க்கத்திற்கு எதுவிதத்திலும் நன்மை பயக்கப் போவதில்லை.

காரைநகரிலுள்ள சீநோர் படகுகட்டும் பகுதி மூடப்பட்டு தென்னிலங்கைக்கு மாற்றப்படப் போவதாக அறிகின்றோம். சீநோர் வலைத்தொழிற்சாலையிலும் இவ்வாறான வேண்டத்தகாத செயல்கள் மீண்டும் மீண்டும் தொடருமாயின் இப்படியான மாற்றம் தான் ஏற்படும்.

ஆகவே சகல பகுதி மக்களும் இயக்கங்களும் இதனை உணர்ந்து இப்படியான வேண்டத்தகாத செயல்களுக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும்.

சாதாரண பொதுமக்களின் எதிர்ப்பின் மத்தியில் எந்த விதமான விடுதலைப் போராட்டமும் வெற்றி பெறப் போவதில்லை. இதனை உணர்ந்து செயற்படுவது அவசியம். இவ்வாறான தொடர்ச்சியான செயற்பாடுகளுக்குப் பொறுப்பானவர்கள் யாராக இருப்பினும் பொதுமக்கள் இனங் காணும்படி நடந்து கொள்வது அவர்களின் கடமையாகும் எனவும் இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

### யாழ். மாவட்ட மாணவரின்

## இலவச பாடநூல் கப்பல், விமானம் மூலம் இறக்குமதி

யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளுக்கான இலவச பாடப் புத்தகங்களை விமானம் மூலம் அல்லது கடல் மார்க்கமாகக் கப்பல் மூலம் அனுப்பி வைப்பதற்கான ஒழுங்குகள் இப்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கல்விச் சேவை அமைச்சின் சிபாரிசுக்கிணங்க இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 1985-ம் ஆண்டின் முதலாம் தவணை ஆரம்பமாகி இரண்டு மாதங்களாகியும், இங்குள்ள பாடசாலைகளுக்கு பாடநூல்கள் இன்னமும் வந்துசேராததையிட்டு உடனடி நடவடிக்கை எடுக்குமாறு, யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வட பகுதிக்கான ரயில் சேவை தற்போது அனுராதபுரம் வரை மட்டுமே நடைபெறுவதால், புத்தகங்களை விமானம் மூலம் அல்லது கப்பல் மூலம் அனுப்ப ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### யாழ். கூ. மொ. வி. கிளையில்:

## பொருட்கள் களவு போயின; படங்கள் எரிக்கப்பட்டன

நேற்று முன்தினம் இரவு யாழ் ஸ்ரான்லி வீதியிலுள்ள கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்ட பொருட்களின் பெறுமதி ஒரு இலட்சத்து எண்பதாயிரம் ரூபா என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

லொறியில் சென்ற சில இளைஞர்கள் மேற்படி நிறுவனத்திலிருந்து ஏழு தீப்பெட்டிக்கும் கருவிகள், மரலிப்பான, 95 மூடை செத்தல் மிளகாய், 15 மூடை உள்ளி, 31 மூடை கொத்தமல்லி உட்பட வேறும் பல உணவுப் பொருட்களைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

கொள்ளையர்கள் அங்கு தொங்கவிடப்பட்டிருந்த முக்கியமான மூவரின் படங்களை உடைத்து எரித்துச் சென்றுள்ளனர் என்றும் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இன்று பதவி ஏற்கவுள்ளது

(பாண்டிச்சேரி)

ஜனப் பாரூக் மரைக்காயர் தலைமையிலான ஐந்து உறுப்பினர் மந்திரிசபை பாண்டிச்சேரியில் பதவி ஏற்கவுள்ளது. அ. தி. மு. க. ஒத்துழைப்புடன் இந்திரா காங்கிரஸ் இங்கு ஆட்சியமைக்கிறது. இந்திரா காங்கிரஸுக்குத் தேர்தலில் அறுதிப்பெரும்பான்மை கிடைத்தது.

### சங்காபிஷேகம்

கந்தரோடை விரமத்து விநாயகர் ஆலய சங்காபிஷேக விழா இன்று சனி காலை 9 மணிக்கு ஆரம்பமாகி வருடாந்த பெருவிழாவுக்கு விசேட 1008 சங்காபிஷேகம் நடைபெறும். அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்படும். விசேட மேளக் கச்சேரிகளும், இன்னிசைக் கச்சேரியும், சொற்பொழிவும் இடம்பெறும்.

### சென். ஜோன்ஸ் ஆங்கில தினவிழா

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியின் வருடாந்த ஆங்கில தின விழா இன்று காலை கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கல்லூரியின் முன்னாள் ஆங்கில ஆசிரியர் திரு. எஸ். எஸ். பஞ்சாட்சரம்பிள்ளையும், இலங்கை வங்கியின் ... பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

### அணிவகுப்பு

(சுழிபுரம் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினர் நடாத்தும் வருடாந்த அணிவகுப்பு வைபவம் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இன்று காலை 9 மணிக்கு யாழ். சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் கே. எம். ... அத்தியட்சகர் எஸ். போஜன் தலைமையில் நடைபெறும்.

### நாவன்மைப் போட்டிகள்

(சித்தங்கேணி)

கீரிமலை சிவநெறிக் கழகம் நடாத்தும் நாவன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை காலை சுன்னாகம் இராமநாதன் கல்லூரியிலும் நாளை காலை பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியிலும் நடைபெறும்.

இப்போட்டியை சிறந்த முறையில் நடாத்துவதற்கான சகல ஏற்பாடுகளையும் மேற்படி கழகச் செயலர் திரு. ச. வநாயகரத்தினம் மேற்கொண்டுள்ளார்.

### யாழ்ப்பாணத்தில்..

—1-ஆம் பக்கத் தொடர்

முதல் செய்துள்ளது இப்போது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

ஒரு கடையில் ஒரே இலக்கமுடைய இரண்டு ஐநூறு ரூபா நோட்டுகள் அகப்பட்டதைத் தொடர்ந்தே இந்த மோசடி அம்பலத்துக்கு வந்துள்ளது. 'போட்டோ பிரதி' எடுக்கப்பட்டு, மிகவும் நுணுக்கமாக வேறு நோட்டுகளுக்கு இடையில் இவைகளைச் செருகி வைத்து தாள்களை ஏமாற்றும் கும்பல் ஒன்று இத் தொழிலைத் திட்டமிட்டுச் செய்து வருவதாகக் கூறப்படுகின்றது.

இந்த மோசடியில் அகப்படாது இருக்குமாறு பொதுமக்கள் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

### நீதிமன்றப்...

—1 ஆம் பக்கத் தொடர்

கிருந்து தொலைபேசி சுவிச்போட், மின்சார மீற்றர் ஆகிய வற்றை அபகரித்துச் சென்றுள்ளதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

### பாரத வெளிவிவகார..

—1-ஆம் பக்கத் தொடர்

னர் இலங்கை, பாகிஸ்தான், நேபாளம், பூட்டான் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்வார் என்றும் தெரிவிக்கப்பட்டது. இலங்கையின் தற்போதைய அரசியல் விவகாரங்களில் நிரம்பிய ஈடுபாடு கொண்ட ரமேஷ் பண்டாரி, பல தடவை இது தொடர்பான பேச்சுவார்த்தைகளிலும் பங்கேற்றிருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### திங்கள் முதல் சுத்திகரிப்பு

யாழ்ப்பாண மாநகரசபை தனது வழமையான நகரச் சுத்திகரிப்பு வேலைகளை வழக்கம்போல மீண்டும் 18ம் திகதி திங்கள் முதல் ஆரம்பிக்கவுள்ளது. மாநகரசபையிலிருந்து கடத்திச் செல்லப்பட்ட மற்றுமொரு டிராக்டர் நேற்று திருப்பி ஒப்படைக்கப்பட்டதால் சுத்திகரிப்பை ஆரம்பிக்கக்கூடியதாகவுள்ளது என ஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானம் தெரிவித்தார்.

### நேற்றைய...

—1ம் பக்கத் தொடர்

பர் பகுதி கிராம சேவையாளர்களுக்கான மாநாடு நேற்று அரசாங்க செயலகத்தில் நடைபெற்றது.

### இலங்கை..

—1ம் பக்கத் தொடர்

பினர்களும் இலங்கைப் பிரச்சினை தொடர்பாகக் கடந்த இரு தினங்களாகக் கிளப்பிய பிரச்சினைகளுக்குப் பதிலளிக்கும் வகையில் அமைச்சர் ஆலம்கான் சுமார் பதினைந்து நிமிடங்கள் இது தொடர்பாக விளக்கம் கொடுத்தார்.

1983 ஜூலை தொடக்கம் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் பாரதம் வகித்து வந்த பங்கை விளக்கிய அமைச்சர் தொடர்ந்து பாரதம் நல்லெண்ண மனப்பான்மையில் இப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண முனைந்து வரும் என்று சொன்னார்.

தமிழ்ப்பகுதிகளில் இலங்கை ராணுவம் நடந்துகொள்ளும் முறை பற்றிய தகவல்கள் மகிழ்ச்சியளிப்பதாக இல்லையென்றும், தமிழகம் வந்திருக்கும் அகதிகள் நாடு திரும்பக்கூடிய சுமுக நிலையை உருவாக்க வேண்டுமெனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

### ஒருவர் மட்டும்

(இருபாலை)

கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் கடமை புரிந்த வைத்திய அதிகாரி செல்வி எஸ். பரமானந்தம், யாழ். வைத்தியசாலைக்கு இடமாற்றம் பெற்று சென்றுள்ளதால் அவரது இடத்திற்கு இதுவரை எவரும் நியமிக்கப்படவில்லை. இதனால் தற்போது ஒரேயொரு வைத்திய அதிகாரி மட்டுமே நோயாளர்களைப் பார்வையிடுகிறார்.

### காலை 3 முதல்...

—1ம் பக்கத் தொடர்

கரையிலிருந்து மூன்று மைல் தூரமே செல்லலாம் எனவும் தெரிவித்த அமைச்சர், கடற்படையினரின் சமிக்ஞைகளுக்கு மீனவர்கள் கட்டுப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார். இம்மீனவர்களுக்கு விசேஷ அடையாள அட்டைகளும் வழங்கப்படவுள்ளது.

இந்த அனுமதி பற்றிய அரசாங்க அறிவித்தல் வானொலி வர்த்தமானி மூலம் வெளியிடப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

### போதியளவு..

—1ம் பக்கத் தொடர்

மட்டுமே நேற்று வழங்கப்பட்டதாகத் தெரிவித்த போக்குவரத்துச் சபை உயர் அதிகாரி ஒருவர், இது குடாநாட்டுச் சேவைக்கு ஒரு நாளைக்கு மட்டுமே போதுமானது என்றார்.

இன்று மேலும் டீசல் கிடைக்காவிட்டால் பஸ்சேவைகள் தொடர்ந்தும் ஸ்தம்பித மடையலாமெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

### ...ரதயா தடச்சர்..

—1-ம் பக்கத் தொடர்

என்று கம்யூனிஸ்ட் கட்சியும் இப்போது முடிவு செய்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மத்தியகுழு கூடி இதுபற்றி பின்னர் தீர்மானம் எடுக்கும் என்று கட்சியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

### பென்ஸ் லொறி..

—1ம் பக்கத் தொடர்

பென்ஸ் லொறி ஒன்று, நேற்று முன்தினம் இரவு ஆயுதங்களுடன் வந்த இளைஞர்களால் எடுத்துச்செல்லப்பட்டதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

மற்றொரு லொறியில் இயந்திர துப்பாக்கிகள் சகிதம் வந்த சுமார் பத்து இளைஞர்கள் திருத்துவதற்காக நிறுத்தப்பட்டிருந்த மேற்படி லொறியை கட்டியிழுத்துக் கொண்டு சென்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைக்கடிகாரங்கள், மணிக்கூடுகள் தரம்பட திருத்துவதில் வல்லுநர்கள்

**உதயா வாச் வேக்ஸ்**

தீவுப்பகுதி வாடிக்கையாளர்கள் நன்மை கருதி கிளை ஸ்தாபனமும் இயங்குகிறது

இன்றே நாடுங்கள்:

**உதயா வாச் வேக்ஸ்**

நவீன சந்தை (பேல்மாடி)
திருநெல்வேலி.

கிளை:

வ. போசராசா
நியூஸ் ஏஜண்ட்
புளியங்கூடல் சந்தி

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 16-03-1985 சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.